DVC 17/2022

03.12..2024.

எசா.2 ,

பெயர்: மகேந்திரன்

த/பெ. நஞ்சப்பகவுண்டர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Respondent 1 Present. R2, 3 absent. Petition filed and allowed. R1 to 3 counsel present.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர்கள் எனக்கு பங்காளி முறை என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அவ்ரகளது வீட்டிற்கும் அரை கி.மீட்டர் துாரமிருக்கும் என்றால் சரிதான். 2020 க்கு முன்பு மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் சின்னேரிபாளையத்தில் பிரச்சனை இருந்தது எனக்கு தெரியும். அதற்கு முன்பு பிரச்சனை இருந்தது குறித்து எனக்கு தெரி யும்.

2018 ம் ஆண்டு மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் இடையே திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பிறகு பெங்களூரில் ஒரு வருடம் இருந்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு கோவையில் சிறிது காலம் குடியிருந்தார்கள் என்றால் சரிதான்.

நான் ஒருமுறை மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் இடையே சண்டை ஏற்பட்டபோது சமாதானப்படுத்துவதற்காக சென்றுள்ளேன் என்றால் சரி தான். மேற்படி விவரத்தினை எனது சாட்சியத்தில் கூறவில்லையென்றால் சரி தான். மனுதாரருக்கும் எதிர் மனுதாரரூக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு நெகமம் காவல்நிலயைத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி புகார் நிலுவையில் உள்ளது என்றால் அது குறித்து நான் கேள்விப்பட்டுள்ளேன்.

2020 ம் ஆண்டு ஒன்றாக குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்று கேள்விப்பட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பங்காளி என்பதால் எதிர் மனுதாரருக்கு ஆதராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Sd/- E. Pragasam B.A., B.L.,
Judicial Magistrate No. II,
Pollachi.